| அலகு: 8. அணுக்கரு இயற்பியல் (25 marks) | |
|---|---|
| 1 mark → 4 Questions | 5 mark → 1 Question 60 |
| 3 mark → 2 Questions 44,45 | 10 mark → 1 Question 68 |

## 8.அணுக்கரு இயற்பியல் I mark Questions

1. ஐசோடோப்புகள் என்பவை
ஆ) ஒரே நிறை எண்ணையும் வேறுபட்ட அணு எண்ணையும் கொண்டவை
ஆ) சமமான புரோட்டான் மற்றும் நியுட்ரான் எண்ணிக்கையை கொண்டவை
**இ) சமமான புரோட்டான் எண்ணிக்கையையும் மாறுபட்ட நியுட்ரான் எண்ணிக்கையும் கொண்டவை**
ஈ) சமமான நியுட்ரான் எண்ணிக்கையையும் வேறுபட்ட புரோட்டான் எண்ணிக்கையும் கொண்டவை

2. கீழ்க்கண்டனவற்றுள் எவை ஐசோடோன்கள் (மா-11)
அ) $_{92}U^{235}$ மற்றும் $_{92}U^{238}$ ஆ) $_{8}O^{16}$ மற்றும் $_{7}N^{14}$
இ) $_{6}C^{14}$ மற்றும் $_{7}N^{14}$ **ஈ) $_{7}N^{14}$ மற்றும் $_{6}C^{13}$**

3. நிறை எண் அதிகரிக்கும் போது அணுக்கரு அடர்த்தி
அ) அதிகரிக்கும் ஆ) குறையும் **இ) மாறாது**
ஈ) அதிகரிக்கலாம் அல்லது குறையலாம் (ஜு-11)

4. ஒரு தனிமத்தின் நேர்மின்கதிர்கள், பெயின்பிரிட்ஜ் நிற மாலையில் வேறுபட்ட சுவடுகளைத் தோற்றுவிக் கின்றன. இந்த நேர்மின் கதிர்கள் (மா-12)
அ) ஒரே நிறையையும் வேறுபட்ட திசைவேகத்தையும் கொண்டிருக்கும்
ஆ) ஒரே நிறை மற்றும் திசைவேகத்தையும் கொண்டிருக்கும்
**இ) வேறுபட்ட நிறை மற்றும் ஒரே திசைவேகத்தையும் கொண்டிருக்கும்**
ஈ) வேறுபட்ட நிறை மற்றும் திசைவேகத்தையும் கொண்டிருக்கும்

5. குவார்க் மாதிரியின்படி நியுட்ரான் எவ்வாறு குறிப்பிடப் டுகின்றது? [J,O-06]
அ) uud **ஆ) udd** இ) udd' ஈ) u'du [J,O-06] – நீக்கப்பட்டது

6. அணுக்கருப் பிளவை விளக்குவது
அ) கூடு மாதிரி **ஆ) திரவத்துளி மாதிரி**
இ) குவார்க் மாதிரி ஈ) போர் மாதிரி (ஜு-11,13)

7. பெரும அயனியாக்கும் திறன் பெற்றது [DPM,J-10,O-10,11]
அ) நியுட்ரான்கள் **ஆ) ஆல்பா துகள்கள்**
இ) காமாக் கதிர்கள் ஈ) பீட்டா கதிர்கள்

8. பெரும ஊடுருவும் திறன் பெற்றது (அ-06)
அ) ஆல்பா துகள்கள் ஆ) பீட்டா கதிர்கள்
**இ) காமாக் கதிர்கள்** **ஈ) புரோட்டான்கள்**

9. அயனியாக்கும் திறன் அடிப்படையில் α, β, γ கதிர்களை வரிசைப்படுத்துக.
அ) α β γ ஆ) β γ α **இ) γ β α** ஈ) γ α β (மா-11)

10. β சிதைவின்போது (மா-09,செ-09)
அ) அணு எண் ஒன்று குறையும் ஆ) நிறை எண் ஒன்று குறையும்
இ) புரோட்டான் எண்ணிக்கை மாறுபடாது
**ஈ) நியுட்ரான் எண்ணிக்கை ஒன்று குறையும்**

11. அணுக்கருவில் உள்ள அணுக்கரு துகள்கள் எதனால் கவரப்படுகின்றன?
அ) ஈர்ப்பியல் விசை ஆ) நிலைமின்னியல் விசை
**இ) அணுக்கரு விசை** ஈ) காந்தவியல் விசை (ஜு-12)

12. அணுக்கருவினுள் ஒரு புரோட்டானுக்கும் மற்றொரு புரோட்டானுக்கும் இடையே உள்ள அணுக்கரு விசை
அ) சுழி ஆகும் **ஆ) குறுகிய நெடுக்கம் உடையது**
இ) விரட்டு விசை ஆகும் ஈ) அதிக நெடுக்க விசையாகும் (அ-11)

13. எந்த பரிமாற்றம் தொடர்ந்து நடைபெறுவதால் அணுக்கரு விசை தோன்றுகிறது
அ) லெப்டான்கள் **ஆ) மீசான்கள்**
இ) ஹைப்பரான்கள் ஈ) போட்டான்கள் [M-06,S-09]

14. அணுக்கரு விசை ஏற்பட காரணமான அணுக்கருத் துகள்களுக்கு இடையில் பரிமாற்றம் அடையும் துகள்கள்
அ) போட்டான்கள் ஆ) லெப்டான்கள்
**இ) மீசான்கள்** ஈ) பாரியான்கள் [J-07]

15. அணுக்கருப் பிளவை ஒன்றில் வெளிப்படும் சராசரி ஆற்றல்
அ) 200 eV **ஆ) 200 MeV** இ) 200 meV ஈ) 200 GeV (ஜு-13)

16. விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் கதிரியக்க ஐசோடோப்பு (மா-11,ஜு-06,08,அ-08,09,12)
அ) $_{15}P^{31}$ **ஆ) $_{15}P^{32}$** இ) $_{11}Na^{23}$ ஈ) $_{11}Na^{24}$

17. இரத்த சோகையை கண்டறிப்பயன்படுவது [M-07,J-07,J-09,M-10,J-11]
அ) $_{14}P^{31}$ ஆ) $_{14}P^{32}$ **இ) $_{26}Fe^{59}$** ஈ) $_{11}Na^{24}$

18. தோல் வியாதிக்கு பயன்படுத்தப்படும் கதிரியக்க ஐசோடோப்பு
அ) $Na^{21}$ ஆ) $I^{131}$ [J-13]
இ) $Fe^{59}$ **ஈ) $P^{32}$**

19. கீழ்க்கண்டனவற்றுள் இரத்த நாளங்களில் அடைப்பு களைக் கண்டறியப் பயன்படுவது (மா-08)
அ) $_{15}P^{31}$ ஆ) $_{15}P^{32}$ இ) $_{26}Fe^{56}$ **ஈ) $_{11}Na^{24}$**

20. அணுக்கரு உலையில் தணிப்பானாக பயன்படுவது
அ) காட்மியம் ஆ) போரான் கார்பைடு
**இ) கன நீர்** ஈ) யுரேனியம் ($_{92}U^{235}$) (மா-07)

21. பின்வருவனவற்றில் எது தணிப்பான் அல்ல? [J-07]
**அ) திரவ சோடியம்** ஆ) சாதாரண நீர்
இ) கிராபைட் ஈ) கன நீர்

22. வேக உற்பத்தி உலைகளில் குளிர்விப்பானாக பயன்படுவது? (அ-10)
ஆ) சாதாரண நீர் ஆ) கனநீர்
**இ) திரவ சோடியம்** ஈ) போரான் கார்பைடு

23. காட்மியம் கழிகளின் பயன் [DPM]
அ) நியுட்ரான்களின் வேகத்தை அதிகப்படுத்த
ஆ) நியுட்ரான்களின் வேகத்தை குறைக்க
**இ) நியுட்ரான்களை உட்கவர** ஈ) வெப்பத்தை வெளியேற்ற

24. காமினி அணுக்கரு உலையில் எரிபொருளாக பயன்படுத்தப்படுவது (செ-09)
அ) யுரேனியம் கார்பைடுகள் மற்றும் புளுட்டோனியம் கலந்தவை
ஆ) புளுட்டோனியம் ஆக்ஸைடுகள் மற்றும் யுரேனியம் கலந்தவை
**இ) $_{92}U^{233}$** ஈ) $_{92}U^{235}$

25. காமினி (Kalpakkam mini= kamini) அணுக்கரு உலையில் எரிபொருளாக பயன்படுத்தப்படுவது (செ-07)
அ) $_{92}U^{238}$ ஆ) $_{92}U^{233}$
**இ) $_{92}U^{233}$** ஈ) குறைவாக செறிவூட்டப்பட்ட யுரேனியம

26. அணுகுண்டு வெடித்தலில் பயன்படுத்தப்படும் தத்துவம் (ஜு-09, மா-13)
**அ) கட்டுப்பாடற்ற அணுக்கரு பிளவை**
ஆ) கட்டுப்பாடான அணுக்கரு பிளவை
இ) அணுக்கரு இணைவு வினை ஈ) வெப்ப அணுக்கரு வினை

27. ஹைட்ரஜன் குண்டின் தத்துவம் [O-11,M-12]
அ) அணுக்கரு பிளவை **ஆ) அணுக்கரு இணைவு**
இ) அணுக்கரு விசை ஈ) கார்பன் நைட்ரஜன் சுழற்சி

28. குறைவேக நியூட்ரான்களின் இயக்க ஆற்றல் (ஜு-08)
அ) 1000 eV முதல் 2000 eV வரை ஆ) 2000 eV முதல் 0.5 M eV வரை
**இ) 0 eV முதல் 1000 eV வரை** ஈ) 0.5 ஆ eV முதல் 10 MeV வரை

29. 1 கியூரி என்பது (மா-13)
அ) 1 கிராம் யுரேனியத்தின் கதிரியக்க செயல்பாட்டிற்குச் சமம்
ஆ) 1 சிதைவு/வினாடி **இ) 3.7 X $10^{10}$ பெக்கொரல்**
ஈ) 1.6 x $10^{12}$ சிதைவு/வினாடி

XII பொதுத் தேர்வில் 150 மதிப்பெண்ணுக்கு குறைந்த பட்சம் 140 மதிப்பெண்களை பெற முதலில் இவ்வினா வங்கியில் உள்ள வினாக்களுக்கான விடைகளை நன்றாக படித்து பயன் பெறவும். மேலும் விபரங்களுக்கு அணுக வேண்டிய கைபேசி எண்: 8122420797
**ஆ.முருகையா, M.Sc., M.Ed., M.Phil. முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.**
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*

30. சிதைவு மாறிலியின் அலகு (மா-12)
அ) அலகில்லை ஆ) நொடி **இ) நொடி$^{-1}$** ஈ) கியூரி

31. ஒரு புரோட்டான் - புரோட்டான் சுற்றில் நான்கு புரோட்டான்கள் அணைந்து உருவாக்குபவை (அ-12)

அ) ஒரு α துகள், இரண்டு எலக்ட்ரான்கள், இரண்டு நியுட்ரினோக்கள் மற்றும் 26.7 meV ஆற்றல்

ஆ) ஒரு α துகள், இரண்டு பாசிட்ரான்கள், இரண்டு நியுட்ரினோக்கள் மற்றும் 26.7 meV ஆற்றல்

**இ) ஒரு ஹீலியம் அணு, இரண்டு பாசிட்ரான்கள், இரண்டு நியுட்ரினோக்கள் மற்றும் 26.7 meV ஆற்றல்**

ஈ) ஒரு α துகள், இரண்டு பாசிட்ரான்கள், இரண்டு ஆண்டி நியுட்ரினோக்கள் மற்றும் 26.7 meV ஆற்றல்

32. குறுக்கு கோட்டு விளைவில் காஸ்மிக்கதிர்களின் செறிவு எந்தக்கோணத்தைப் பொறுத்து பெருமமாக இருக்கும்?
அ) $0^0$ ஆ) $45^0$ **இ) $90^0$** ஈ) $60^0$ (அ-11)

33. மின்னூட்டமற்ற, நிறையற்ற , ஒளியின் திசைவேகத்தில் செல்லும் துகள்
அ) பாரியான் ஆ) மீசான் இ) லெப்டான் **ஈ) .:போட்டான்** (செ-08)

34. கீழ்க்கண்டனவற்றுள் நிறையற்றவை, மின்னூட்டமற்ற வை ஆனால் ஆற்றலும் தற்சுழற்சியும் பெற்றவை [J-12]
**அ) நியுட்ரினோ** ஆ) மியூயான் இ) பையான் ஈ) கேயான்

35. ஒரு போட்டானிற்கு (ஜு-08)
**அ) ஆற்றல் உண்டு ஆனால் நிறை சுழியாகும்**
ஆ) நிறை உண்டு ஆனால், ஆற்றல் சுழியாகும்
இ) நிறை, ஆற்றல் இரண்டுமே சுழியாகும்
ஈ) நிறை, ஆற்றல் இரண்டுமே முடிவிலியாகும்

36. கீழ்க்கண்டனவற்றுள் எது பாரியான் பிரிவைச் சார்ந்தது? (மா-10)
அ) போட்டான் ஆ) எலக்ட்ரான்
இ) பையான் **ஈ) புரோட்டான்**

37. கீழ்க்காணும் துகள்களில் எது லெப்டான் ஆகும்? [M-06]
**அ) எலக்ட்ரான்** ஆ) புரோட்டான்
இ) நியுட்ரான் ஈ) π- மீசான்

## 8.அணுக்கரு இயற்பியல் 1 mark Problems

1. ஹீலியம் அணுக்கரு ஒன்றின் நிறைவழு 0.03 amu எனில், அதன் பிணைப்பு ஆற்றல் (ஜு-12)
அ) 27.93 eV ஆ) 27.93 KeV **இ) 27.93 MeV** ஈ) 27.93 GeV

2. 1 amu க்கு சமமான மதிப்பு [J-06,S-08]
அ) 931 eV ஆ) கார்பன் அணுவின் நிறை
**இ) 1.66 x $10^{-27}$ kg** ஈ) ஆக்ஸிஜன் அணுவின் நிறை

3. 1 அணு நிறை அலகுக்கு (1 amu) சமமான ஆற்றல்
**அ) 931 MeV** ஆ) 931 meV இ) 931 eV ஈ) 913 MeV

4. உட்கரு $_{26}Fe^{56}$ -ன் பிணைப்பு ஆற்றல் (S-07,J-10)
அ) 8.8 MeV ஆ) 88 MeV **இ) 493 MeV** ஈ) 41.3 MeV

5. $_{13}Al^{27}$ மற்றும் $_{14}Si^{28}$ என்ற அணுக்கருக்கள் எதற்கு எடுத்துக்காட்டாக அமையும்?
அ) ஐசோடோப்பு ஆ) ஐசோபார்
**இ) ஐசோடோன்** ஈ) ஐசோமர் (மா-07,08, அ-08)

6. $_4Be^8$ அணுக்கருவின் ஆரம் (மா-13)
அ) 1.3 x $10^{-15}$ m **ஆ) 2.6 x $10^{-15}$ m**
இ) 1.3 x $10^{-13}$ m ஈ) 2.6 x $10^{-13}$ m

7. அணுக்கருவின் ஆரம் 2.6 x $10^{-15}$ மீ எனில், அதன் நிறை எண் யாது? (அ-12)
அ) 52 ஆ) 104 **இ) 64** ஈ) 128

8. அணுக்கருவின் ஆரம் 5.2 x $10^{-15}$ மீ எனில், அதன் நிறை எண் யாது? (ஜு-08)
அ) 2 ஆ) 4 **இ) 8** ஈ) 16

9. கதிரியக்க தனிமம் ஒன்றின் சராசரி ஆயுட்காலத்திற்கும், (τ) அரை ஆயுட்கால த்திற்கும்($T_{\frac{1}{2}}$) இடையேயாதொடர்பு (மா-08)

அ) $\tau = 2\, T_{\frac{1}{2}}$ **ஆ) $\tau = \frac{T_{\frac{1}{2}}}{0.6931}$** இ) $\tau = 0.6931\, T_{\frac{1}{2}}$ ஈ) $\tau = \frac{0.6931}{2}$

10. சிதைவு மாறிலி 0.0693 நாள்$^{-1}$ கொண்ட ஒரு கதிரியக்க தனிமத்தின் அரை ஆயுட்காலம் (செ-07,08,12, ஜு-12)
**அ) 10 நாட்கள்** ஆ) 14 நாட்கள் இ) 140 நாட்கள் ஈ) 1.4 நாட்கள்

11. கதிரியக்க தனிமம் ஒன்றின் அரை ஆயுட்காலம் 300 நாட்கள் எனில், அதன் சிதைவு மாறிலி (அ-10)
அ) 0.00231 நாட்கள் **ஆ) 0.00231/ நாள்**
இ) 0.0231/ நாள் ஈ) 0.0231 நாள்

12. ரேடானின் சராசரி ஆயுட்காலம் 5.5 நாட்கள். ஆதன் அரை ஆயுட்காலம் (ஜு-09)
அ) 8 நாட்கள் ஆ) 2.8 நாட்கள் இ) 0.38 நாட்கள் **ஈ) 3.8 நாட்கள்**

13. $N^{13}$ அரை ஆயுட்காலம் 10.1 நிமிடங்கள், அதன் ஆயுட்காலம்
அ) 5.05 நிமிடங்கள் ஆ) 20.2 நிமிடங்கள்
இ) $\frac{10.1}{0.6931}$ நிமிடங்கள் **ஈ) முடிவிலி** (மா-12,13 அ-10)

14. கதிரியக்க சிதைவு சமன்பாடு $N = N_0\, e^{-\lambda t}$ என்பது படி தனிமம் ஒன்று t –காலத்தில் சிதைவடைந்த கதிரியக்க அணுக்களின் எண்ணிக்கை (ஜு-10)
அ) $N_0$ ஆ) N **இ) $N_0 - N$** ஈ) $\frac{N_0}{2}$

15. $_5B^{10}$ உடன் நியுட்ரான் மோதும்போது ஆல்பா துகள்கள் வெளிப்படுகிறது. எஞ்சிய அணுக்கரு [DPM]
**அ) $_3Li^7$** ஆ) $_1H^2$ இ) $_1H^3$ ஈ) $_2He^4$

16. $_{80}Hg^{198} + X \rightarrow {}_{79}Au^{198} + {}_1H^1$ என்ற அணுக்கரு வினையில் X என்பது எதனைக்குறிக்கும் (ஜு-08,மா-09)
அ) புரோட்டான் ஆ) எலக்ட்ரான் **இ) நியுட்ரான்**
ஈ) டியுட்ரான்

17. $_4Be^9 + X \rightarrow {}_6C^{12} + {}_0n^1$ என்ற அணுக்கரு வினையில் X என்பது எதனைக்குறிக்கும்
அ) புரோட்டான் **ஆ) α -துகள் (ஆல்பா)**
இ) நியுட்ரான் ஈ) டியுட்ரான்

18. கீழ்க்காணும் அணுக்கரு வினையில் $_7N^{14} + {}_0n^1 \rightarrow X\ {}_1H^1$ தனிமம் X என்பது
அ) $_6N^{14}$ **ஆ) $_6C^{14}$** இ) $_6O^{14}$ ஈ) $_7C^{13}$ [M-06]

19. கீழ்க்காணும் அணுக்கரு வினையில் $_{13}Al^{27} + {}_2He^4 \rightarrow X + {}_0n^1$ தனிமம் X என்பது [O-06]
அ) $_{15}Si^{30}$ **ஆ) $_{15}P^{30}$** இ) $_{15}S^{30}$ ஈ) $_{15}Si^{29}$

20. 1 கிலோ கிராம் நிறையுள்ள பொருள் முழுவதுமாக ஆற்றலாக மாற்றப்பட்டால் உருவாகும் ஆற்றல்
**அ) 9 x $10^{16}$ J** ஆ) 9 x $10^{24}$ J இ) 1 J ஈ) 3 x $10^{18}$J [O-10]

21. β-சிதைவின்போது (மா,அ-09)
அ) அணு எண் ஒன்று குறையும்
ஆ) நிறை எண் ஒன்று குறையும்
இ) புரோட்டான் எண்ணிக்கை மாறுபடாது
**ஈ) நியுட்ரான் எண்ணிக்கை ஒன்று குறையும்**


**ஆ.முருகையா, M.Sc., M.Ed., M.Phil. முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.**
மின்னஞ்சல்: tnhspgtakpm@gmail.com

22. $zX^A$ என்ற தனிமம் அடுத்தடுத்து மூன்று α சிதைவு களையும், நான்கு β சிதைவுகளையும் அடைந்த பிறகு Y என்ற தனிமமாக மாறுகிறது எனில், தனிமத்தின் நிறை எண் மற்றும் அணு எண் முறையே [J-07]
***அ) A –12, Z-2*** ஆ) A -12, Z+ 2 இ) A-12, Z+2 ஈ) A – 8, Z +2

23. ஒரு கதிரியக்க தனிமம் $_zX^A$ மூன்று ஆல்பா துகள்களையும் மற்றும் 4 பீட்டா துகள்களையும் வெளியிட்டு தனிமம் Y யாக மாறுகிறது. துனிமம் Y என்பது
அ) $_{z-6}Y^{A-12}$ ஆ) $_{z+2}Y^{A-12}$ ***இ) $_{z-2}Y^{A-12}$*** ஈ) $_{z-10}Y^{A-12}$ (மா-08)

24. $_{92}U^{235}$ ஐசோடோப்பு α மற்றும் β சிதைவுகளை அடைந்த பிறகு $_{82}Pb^{206}$ ஐசோடோப்பாக மாறுகிறது. அக்கதிரியக்கச் சிதைவில் வெளிப்படும் α மற்றும் β துகள்களின் எண்ணிக்கை முறையே
அ) 6, 8 ஆ) 4, 3 ***இ) 8, 6*** ஈ) 3, 4 (மா-07)

25. கதிரியக்க தனிமம் ஒன்று $\frac{1}{e}$ மடங்காக குறைய எடுத்துக் கொள்ளும் காலம்
அ) அரை ஆயுட்காலம் ***ஆ) சராசரி ஆயுட்காலம்*** [DPM,J-13]
இ) அரை ஆயுட்காலத்தின் பாதி ஈ) சராசரி ஆயட்காலத்தின் பாதி

26. கதிரியக்க தனிமம் ஒன்று தொடக்க அளவில் இருந்ததை [J-06] போன்று $e^{-1/2}$ மடங்காக குறைவதற்கு எடுத்துக் கொள்ளும் காலம்
அ) அரை ஆயுட்காலம் ஆ) அரை ஆயுட்காலம் /2
இ) சராசரி ஆயுட்காலம் ***ஈ) சராசரி ஆயுட்காலம்/2***

## 8. அணுக்கரு இயற்பியல் 3 மதிப்பெண் வினாக்கள்

1. நிறை வழு என்றால் என்ன? (அ-10)
2. α - சிதைவு என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக. (DMP,M-06,13)
3. நியுட்ரானின் ஏதேனும் மூன்று பண்புபளைக் கூறுக. (ஜு-06,மா-08,அ-11)
4. அணுக்கருவின் பிணைப்பு ஆற்றல் என்றால் என்ன? (செ-09)
5. பிணைப்பு ஆற்றல் வரைகோட்டிலிருந்து பெறப்படும் ஏதேனும் மூன்று முடிவுகளை எழுதுக. (அ-06)
6. அணுக்கரு விசையின் ஏதேனும் 3 பண்புகளைக் கூறுக.
7. செயற்கை கதிரியக்கம் என்றால் என்ன? (ஜு-12,செ-12)
8. வரையறு - கியூரி. (M-08,J-13)
9. ராண்டஜன் வரையறு. (ஜு-07,அ-08)
10. Write proton-proton cycle that takes place in sun and stars. [M-11]
11. மாறு நிலைபெருமன் மற்றும் மாறுநிலை நிறை வரையறு. (செ-08)
12. அணுக்கரு உலையின் பயன்பாடுகளை கூறுக. (மா-13)
13. அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தும் தண்டுகளின் பயன் என்ன? எவையேனும் இரண்டு கட்டுப்படுத்தும் தண்டுகளைக் குறிப்பிடுக. (செ-07)
14. உற்பத்தி உலை என்பது யாது? (மா-09)
15. லெப்டான்கள் பற்றி குறிப்பு வரைக. (ஜு-07,மா-12)
16. காஸ்மிக் கதிர்கள் என்றால் என்ன? (ஜு-08)
17. இயக்க ஆற்றலின் அடிப்படையில் நியுட்ரான்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன? (ஜு-09)
18. சோடி உருவாதல் மற்றும் பருப்பொருள் அழிதல் என்றால் என்ன? (ஜு-06,மா-07,08)

## 8. அணுக்கரு இயற்பியல் 3 மதிப்பெண் கணக்கீடுகள்

1. கொடுக்கப்படடுள்ள அணுக்களிலிருந்து ஐசோடோப் புகள், ஐசோபார்கள், மற்றும் ஐசோடோன்களின் சோடிகளைத் தேர்வு செய்க,
: $_{11}Na^{22}$, $_{12}Mg^{24}$, $_{11}Na^{24}$, $_{10}Ne^{23}$ [M-12]
2. ரேடானின் அரை ஆயுட்காலம் 3.8 நாட்கள். அதனின் சராசரி ஆயுட்கால த்தை கணக்கிடு. (மா-07,ஜு-09,10)
3. $_{84}Po^{218}$ அரை ஆயுட்காலம் 3 நிமிடங்கள். 15நிமிடங்களில், அது சிதைவடைந்த விழுக்காடு என்ன? (செ-7,ஜு-13)
4. $_{84}Po^{214}$ கதிரியக்க ஐசோடோப்பு அடுத்தடுத்து இரு ஆல்பா (α) சிதைவுகளையும், இரு பீட்டா (β) சிதைவுகளையும் ஏற்படுத்தும்போது உருவாகும் ஐசோடோப்பின் அணு எண் மற்றும் நிறை எண்ணைக் கணக்கிடுக. (ஜு-09)
5. டிரிட்டியத்தின் அரை ஆயட்காலம் 12.5 ஆண்டுகள். 25 ஆண்டுகளுக்கு பிறகு அதன் எவ்வளவு பகுதி எஞ்சியிருக்கும். (மா-10,செ-12)
6.
7. டிரிட்டியத்தின் அரை ஆயட்காலம் 12.5 ஆண்டுகள். 50 ஆண்டுகளுக்கு பிறகு அதன் எவ்வளவு பகுதி எஞ்சியிருக்கும். (ஜு-12)
8. 5 அரை ஆயுட்காலத்திற்கு பின்னர் மீதமிருக்கும் கதிரியக்கத் தனிமத்தின் விழுக்காட்டைக் கணக்கிடுக. [M-11]
9. 1 கிராம் $_3Li^6$ ல் உள்ள அணுக்களின் எண்ணிக்கையை கணக்கிடுக. (அவகேட்ரோ எண் = 6.023 x $10^{23}$) [O-11]

## 8. அணுக்கரு இயற்பியல் 5 மதிப்பெண் வினாக்கள்

1. சாடி மற்றும் பஜன் ஆகியோரின் கதிரியக்க சிதைவு விதிகளைக் கூறுக.(மா-11)
2. நியுட்ரானின் பண்புகளைக் கூறுக. (ஜு-13)
3. உயிரியலில் கதிர்வீச்சுகளின் தீய விளைவுகள் பற்றிய குறிப்பு வரைக.(செ-08)
4. காஸ்மிக்கதிர் பொழிவு எவ்வாறு ஏற்படுகிறது என்பதனை விவரி. (மா-07,ஜு-12)
5. காஸ்மிக் கதிர்களின் குறுக்கு கோட்டு விளைவை விளக்குக. (செ-07,08)
6. ஆல்பாக் கதிர்களின் பண்புகளைக் கூறுக. (அ-10)

## 8. அணுக்கரு இயற்பியல் 5 மதிப்பெண் கணக்கீடுகள்

1. $_{20}Ca^{40}$ அணுக்கருவின் பிணைப்பாற்றல் மற்றும் அணுக்கருத்துகள் ஒன்றின் பிணைப்பாற்றலைக் கணக்கிடுக. கொடுக்கப்பட்டுள்ளவை : புரோட்டானின் நிறை = 1.007825 amu நியுட்ரானின் நிறை 1.008665 amu அணுக்கருவிக் நிறை
$_{20}Ca^{40}$ = 39.96259 amu.r [DPM] or
2. இரு $_1H^2$ அணுக்கருக்கள் இணைந்து ஒரு $_2He^4$ அணுக்கரு உருவாகும்போது வெளிப்படும் ஆற்றலைக்கணக்கிடுக. கொடுக்க ப்பட்டவை : $_1H^2$ மற்றும் $_2He^4$ ஆகியவற்றின் ஒரு அணுக்கருத்துகளுக்கான பிணைப்பு ஆற்றல்கள் 1.1 MeV முறையே மற்றும் 7.0 MeV ஆகும். (செ-12) Or
3. $_{13}Al^{27}$ + $_1H^2$ → $_{12}Mg^{25}$ + $_2He^4$ என்ற வினையில் வெளிப்படும் ஆற்றலைக் கணக்கிடுக. கொடுக்கப் பட்டவை : $_{13}Al^{27}$ ன் நிறை = 26.981535 amu.
$_1H^2$ = 2.014102 amu. $_{12}Mg^{25}$ ன் நிறை = 24.98584 amu.
$_2He^4$ ன் நிறை = 4.002604 amu. [S-12]
4. $_6C^{12}$ மற்றும் $_6C^{13}$ அணுக்கருக்களின் ஒரு அணுக்கருத்துகளு க்கான பிணைப்பு ஆற்றல்கள் முறையே 7.68 MeV மற்றும் 7.47 MeV என அமைகின்றன. $_6C^{13}$ அணுக்கருவி லிருந்து ஒரு நியுட்ரான் வெளியேற்றத் தேவையான ஆற்றலைக் கணக்கிடுக. [M-09]
5. $_6C^{12}$ அணுக்கருவின் நிறைவழு 0.098 amu எனில், ஒரு அணுக்கருத்துகளு க்கான பிணைப்பு ஆற்றலைக் கணக்கிடுக. (ஜு-07)
6. கீழ்வரும் வினைகளில் வெளிபப்டும் ஆற்றலைக் கணக்கிடுக.
$_3Li^6$ + $_0n^1$ → $_2He^4$ + $_1H^3$ . $_3Li^6$ அணுக்கருவின் நிறை = 6.015126 amu
$_0n^1$ - ன் நிறை = 1.008665 amu,
$_2He^4$ அணுக்கருவின் நிறை = 4.002604 amu,
$_1He^3$ அணுக்கருவின் நிறை = 3.016049 amu. [O-11]
7. கதரியக்கத் தனிமம் ஒன்றின் சிதைவு மாறிலி 0.00231/நாள். ஆதன் அரை ஆயுட்காலம், சராசரி ஆயட்காலம் ஆகியவற்றைக் கணக்கிடுக. [M-10]
8. சிறு அளவு ரேடான் தனிமப்பொருள் 60% சிதைவு அடைய ஆகும் காலத்தை கணக்கிடு ரேடானின் அரை ஆயுட்காலம் = 3.8 நாட்கள் (மா-08,13)
9. தொல்பொருளியல் கூடத்தில் இருந்து பெறப்பட்ட ஒரு எலும்புத்துண்டு நிமிடத்திற்கு 15 சிதைவுகளைத் தருகின்றது. அதே போன்று புதிய எலும்பு ஒன்று 3 நிமிடத்திற்கு 19 சிதைவுகளைத் தருகிறது. மாதிரியின் வயதைக்கணக்கிடுக. ($T_{1/2}$ = 5570 ஆண்டுகள்) (மா-06,அ-11) அல்லது
10. ஒரு அணுக்கரு உலை 32 MW என்ற வீதத்தில் உற்பத்தி செய்கிள்றது எனில், ஒரு வினாடியில் $_{92}U^{235}$ -ல் எத்தனை பிளவைகள் ஏற்பட வேண்டும் என்பதனைக் கணக்கிடுக. ஒரு பிளவைக்கான ஆற்றல் 200 MeV எனகருதுக. [J-06,08S-09]
11. கதிரியக்கச் செயல்பாடு 1 curie என்றிருக்கும் ரேடியத்தின் ($_{88}Ra^{226}$) நிறை ஏறக்குறைய 1 கிராம் எனக்காட்டுக.
(கொடுக்கப்பட்டவை : $T_{1/2}$ = 1600 ஆண்டுகள் 1 curie = 3.7 x $10^{10}$ சிதைவுகள் /வினாடி) [O-06.M-06]
12. 1 kg அளவுள்ள $U^{235}$ பிளவுரும்போது வெளிப்படும் ஆற்றலுக்கு சமமான ஆற்றலைப் பெற தேவைப்படும் நிலக்கரியின் நிறையை


***ஆ.முருகையா, M.Sc., M.Ed., M.Phil. முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.***
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*

*(டன்) கணக்கிடுக. நிலக்கரியின் எரிதலின் வெப்ப நிலை* = 33.6 x $10^6$J/kg, 1 ld; = 1000 kg. *ஒரு பிளவுக்கான ஆற்றல்* = 200 MeV. 1eV = 1.6 x $10^{-19}$J. *அவாகேட்ரோ எண்* = 6.023 x $10^{23}$. *உனது விடையை கிலோ வாட் மணியிலும் தருக.*

[dpm,M-06,J-08]

## 8.அணுக்கரு இயற்பியல் 10 மதிப்பெண் வினாக்கள்

1. பெயின்பிரிட்ஜ் நிறைமாலைமானியைக் கொண்டு அணுக்கரு ஐசோடேபப்புகளின் நிறைகளைக் கணக் கிடும்முறையை விவரி. [DPM,J-06,J-07, O-07,08,M-09,J-10,O-10,J-11,S-12]
2. கெய்கர் முல்லர் எண்ணியின் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தினை விவரி. *(மா-07,செ-07,ஜு-09,மா-11,13)*
3. கதிரியக்க தனிம்ம ஒன்றில் எந்தவொரு நேரத்திலும் உள்ள தனிமத்தின் அளவைக்க கண்டறிவதற்கான கோவையை பெறுக. அரை ஆயுட்காலம் மற்றும் சிதைவு மாறிலி ஆகியவைகளுக்கு இடைப்பட்ட தொடர்பை பெறுக. *(செ-08,ஜு-09, மா-09)*
4. காஸ்மிக் கதிர்கள் என்றால் என்ன? அவற்றின் குறுக்கு கோட்டு விளைவினை படத்துடன் விவரி. *(மா-08,ஜு-13)*
5. கதிரியக்க சிதைவு விதியினைக்க கூறுக. $N = N_0 e^{-\lambda t}$ என்ற சமன்பாட்டைப் பெறுக. அரை ஆயுட்காலம் மற்றும் சிதைவு மாறிலி ஆகியவைகளுக்கு இடைப்பட்ட தொடர்பை பெறுக. [O-11,J-12]
6. அணுக்கரு உலை என்றால் என்ன? 1) தணிப்பான் 2) கட்டுப்படுத்தும் தண்டு 3) நியுட்ரான் எதிரொளிப்பான் ஆகியவற்றின் செயல்பாட்டினை விளக்குக. (படம் தேவையில்லை) அணுக்கரு உலையின் பயன்களைக் குறிப்பிடுக. *(மா-06)*

27th August 2013


*ஆ.முருகையா, M.Sc., M.Ed., M.Phil. முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.*
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*